# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.21 நாள் 28.04.2026

| | | | |
|---|---|---|---|
| CC. No. | 294/2025 | | |
| பெயர் | மணி | த/பெ. | மண்ணாங்கட்டி |
| வயது | 72 | தொழில் | |
| கிராமம் | சென்னை | தாலுக்கா | சென்னை. |

**(எதிரிகள் ஆஜர்).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். நான் கடந்த 31.03.2013- ல் மத்திய கூட்டுறவு வங்கியில் உதவி பொது மேலாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். இதற்கு முன்பு 2011 முதல் 28.03.2012 வரை மயிலாடுதுறை வட்டத்தில் களமேலாளராக பணிபுரிந்து, கூடுதல் பொறுப்பாக சீர்காழி வட்டத்தில் களமேலாளராக இருந்தேன். எனக்கு கீழ் உதவி கள மேலாளராக ஆறு நபர்கள் வேலை பார்த்தார்கள். அவர்கள் சங்கங்களில் மேற்பார்வையிட்டு எனக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். கொண்டல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் எனது கட்டுபாட்டில் இருந்தது. அதற்கு உதவி களமேலாளராக திரு. சங்கர் அப்போது பணிபுரிந்தார். விவசாயக் நகைக்டன் மற்றும் விவசாயக் கடன்கள் பொறுத்தவரை உதவி களமேலாளர் சங்கத்திற்கு நேரில் சென்று கடன் விண்ணப்பம் மனு, கிராம நிர்வாக அலுவலர் சான்று, சங்கத் தீர்மானம் மற்றும் நகைக்கடன் பதிவேடு ஆகியவற்றை சரிபார்த்து அவர் சான்றளிக்கவேண்டும். அந்த சான்றின் பேரில் நான் கடனை அனுமதிக்க பரிந்துரை செய்வேன். மத்திய கூட்டுறவு வங்கி சீர்காழி கிளையானது அனைத்து பதிவேடுகளையும் பெற்றுக்கொண்டு கடனை அனுமதிப்பார்கள். பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் பட்டியல் தயாரிப்பதும், மேற்சொன்ன நடைமுறையில் தான் கடன் வழங்கப்படும். என்னிடம் காண்பிக்கப்படும் சுற்றறிக்கை எண்.290 ந.க.எண்.2900/2009-2010பி, நாள் 11.11.2009 மத்திய கூட்டுறவு வங்கியால் வழங்கப்பட்டதுதான். அந்த சுற்றறிக்கை **அ.சா.ஆ.9** ஆகும். 2011-2012-க்கான சுற்றறிக்கை எண்.413 ந.க.எண்.1509/2009சி1 நாள். 04.06.2010 மத்திய கூட்டுறவு வங்கியால் வழங்கப்பட்டதுதான். அந்த சுற்றறிக்கை **அ.சா.ஆ.10** ஆகும். என்னை கூட்டுறவு விசாரணை அதிகாரி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

CJM, MAYILADUTHURAI.

அந்த வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த வாக்குமூலம் **அ.சா.ஆ.11** ஆகும். என்னை வணிக குற்றப்பிரிவு புலனாய்வு துறை போலீசார் விசாரித்தார்.

<u>1, 3, 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :-

உதவி கள மேலாளர் கடன்தாரருடைய ஆவணங்களையும், சான்றுகளையும் களஆய்வு செய்து சரிபார்த்து தகுதியுள்ள பட்சத்தில் சான்று வழங்குவார்கள் என்றால் சரிதான். நான் அந்த சான்றின் அடிப்படையில் தகுதியுள்ள பட்சத்தில் வங்கிற்கு கடன் கொடுப்பதற்கு பரிந்துரை செய்வேன். உதவி கள மேலாளர் அனைத்து ஆவண்ஙகளையும் சரிபார்த்து பின்பு தான் ஒருவருக்கு கடன் வழங்கலாம் என்று சான்று வழங்குவார். மேற்படி சரிபார்ப்பு சான்று மற்றும் பரிந்துரை செய்து வங்கி கிளை மேலாளருக்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்ட கடன்தாரருடைய கோப்பு வங்கி கிளை மேலாளர் பெற்று சரிபார்த்து கடனை அனுமதிப்பார் என்றால் சரிதான். வங்கி கிளை மேலாளர் அசல் ஆவண்ஙகளை பெற்றுதான் கடனை அனுமதிப்பார் என்றால் சரிதான். அந்த கடன்தாரர்களுடைய அசல் ஆவணங்கள் அனைத்தும் வங்கி கிளையில் தான் இருக்கும். 81- விசாரணை அதிகாரியிடம் நான் கொடுத்த வாக்குமூலத்தில் இடைச்சொருகள் உள்ளது என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்தபோது மேற்படி இடைச்சொருகள் எழுதப்பட்டதா என்பது எனக்கு ஞாபகம் இல்லை. தற்போது அதனை அறிகிறேன். 81- விசாரணை அதிகாரி வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வணிக குற்றப்பிரிவு புலனாய்வு துறை போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை.

(1,3,4 எதிரிகள் வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை 2ம் எதிரி வழக்கறிஞரால் அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்பட்டது)

<u>மறு விசாரணை</u> :-

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.